செய்தி வெளியீட்டு எண்.769 நாள்: 29.10.2009

# பள்ளிக்கரணையில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் கட்டப்பட்ட புதிய சாலை மேம்பாலத்தை மாண்புமிகு துணை முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மறைமலை அடிகள் பாலம் – இரும்புலியூர் சாலை மற்றும் பல்லாவரம் – துரைப்பாக்கம் சாலை சந்திப்பில் அதிகரித்து வரும் போக்குவரத்து காரணமாகவும் அருகாமையில் அதிகமாக தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், அரசு மற்றும் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் அமைந்துள்ளதாலும், பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், அரசு ஊழியர்கள் விரைவாகவும், வசதியாகவும் பயணிக்க ஏதுவாக சுமார் 20 கோடி ரூபாய் செலவில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் பள்ளிக்கரணையில் அமைக்கப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை இன்று (29.10.2009) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இப்பாலத்தின் மேல் பகுதியில் வேளச்சேரியிலிருந்து – தாம்பரம் மற்றும் தாம்பரத்திலிருந்து – வேளச்சேரி செல்லக்கூடிய வாகனங்களும், கீழ்ப் பகுதியில் பல்லாவரம் – துரைப்பாக்கம் சாலையிலிருந்து வேளச்சேரி மற்றும் தாம்பரத்திற்கு செல்லக்கூடிய வாகனங்களும், வேளச்சேரி மற்றும் தாம்பரத்திலிருந்து பல்லாவரம்– துரைப்பாக்கம் சாலைக்கு செல்லக்கூடிய வாகனங்களும் அனுமதிக்கப்படவுள்ளன. இதன் காரணமாக, இப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறைந்து, பொதுமக்கள் விரைவாகவும், வசதியாகவும் பயணம் செய்வதற்கு வழி ஏற்படும்.

இப்பாலத்தின் மொத்த நீளம் 642.40 மீட்டர். பாலத்தின் அகலம் 22 மீட்டர் அளவில் 6 வழிப் பாதையாக அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத்துறைச் செயலாளர் திரு. ஜி. சந்தானம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.